தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6
ந.க.எண். 98370 /டி1/இ4/2012 நாள்.17.12.2012

======

பொருள் பள்ளிக் கல்வி – அரசு உதவி பெறும் பள்ளிகள்– இரட்டைப் பட்டப் படிப்பு மூலம் ஓராண்டு படிப்பின் மூலம் பெறும் பட்டங்கள் (dual degree) – நியமனம் மற்றும் பதவி உயர்வுக்கு எடுத்துக் கொள்வது – சார்ந்து.

பார்வை பல்வேறு தொகுப்பு வழக்கின் கீழ் சென்னை உயர்நீதிமன்றம் 14.8.2012–ல் வழங்கிய தீர்ப்பாணை.

====

தொடக்கக் கல்வித் துறையில் பல்வேறு தொகுப்பு வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்றம் 14.8.2012–ல் வழங்கிய தீர்ப்பில் பல்கலைக் கழகங்களில் ஏற்கனவே ஒரு பட்டம் பெற்ற ஒருவர் இரட்டைப் பட்டப் படிப்பு மூலம் (dual degree) ஓராண்டில் பயின்று பெறும் பட்டத்தை 3 ஆண்டு பட்டத்திற்கு இணையாக எடுத்துக் கொள்ள முடியாது எனவும், இவ்வாறு ஓராண்டில் பெறும் பட்டங்களை வைத்து அரசுப் பணிகளில் பதவி உயர்வு மற்றும் நியமனங்களுக்கு எடுத்துக் கொள்ள இயலாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அனைத்து அரசு உதவி பெறும் உயர்நிலை/ மேல்நிலை பள்ளிகளில் பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனங்களுக்கு இரட்டைப் படிப்பு மூலம் ஓராண்டு மட்டும் பயின்று (dual degree) பெறும் பட்டத்தை வைத்து அனுமதி வழங்கக் கூடாது என அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கலாகிறது. இச்செயல்முறைகளைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை மறு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

18/12

பெறுநர்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,

நகல் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல் இவ்வலுவலக டி2 பிரிவு.